Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

08.05.2020 வெள்ளிக்கிழமை

## 4 பேர் மேலும் குணமடைவு

யாழ்ப்பாணம், மே 8
கொரோனா தொற்றுக்கு உள்ளான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 4 பேர் மேலும் குணமடைந்துள்ளனர். இவர்களுடன் சேர்த்து 14 பேர் குணமடைந்துள்ளதாக,

2

ஆட்டுப்பட்டித் தெருவில்

## இளைஞன் திடீர் சாவு

### கொரோனா எனச் சந்தேகம்

கொழும்பு, மே 8
கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருவில் இளைஞர் ஒருவர் திடீரென உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. போதைப் பொருளுக்கு அடிமையாகிய இளைஞரே திடீரென மூச்சுத் திணறலால் உயிரிழந்துள்ளார். எந்தவித நோய் அறிகுறிகளும் இன்றி இவர் உயிரிழந்த காரணத்தால் அது தொடர்பில் பரிசோத

2

இலங்கையை ஐக்கியப்படுத்த

## கூட்டமைப்பு இணங்காது மாற்று அணியே தேவை

### சொல்கிறார் வாசுதேவ

கொழும்பு, மே 8
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நிலைப்பாட்டுடன் இணக்கத்துக்கு வருவது கடினமான செயலாகும். எனவே, நடுநிலையாக செயற்படக்கூடிய பலம்மிக்க சக்தியொன்று தமிழ் மக்கள் மத்தியில் உருவாகவேண்டும். இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார நேற்று 'உதயனிடம்' தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் பிரதமரிடம் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை

2

## இலங்கைக்கு நிதியுதவி ஆராய்கிறது ஐ.எம்.எவ்.

கொழும்பு, மே 8
அவசர நிதி உதவிக்கான இலங்கையின் கோரிக்கை தொடர்பாக இலங்கை அரசுடன் கலந்துரையாடி வருவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.
சர்வதேச நாணய நிதியத்தின் செய்தியாளர் கூட்டத்தில் பேசிய சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்பு பணிப்பாளர் ஜெர்ரி ரைஸ், விரைவான கடன் வசதியின் கீழ், அவசர நிதி உதவிக்காக இலங்கை

2

# கூட்டமைப்பைத் திருப்திப்படுத்தினால் சிங்கள மக்களின் ஆதரவை இழப்பீர்!



## மஹிந்தவுக்கு கிளம்புகின்றது எதிர்ப்பு

கொழும்பு, மே 8
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் அரசு விழிப்பாகவே இருக்க வேண்டும். பெரும்பான்மையின மக்கள் வழங்கிய ஆணையைக் காட்டிக்கொடுக்கும் வகையில் கூட்டமைப்பின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது. அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கவும் மாட்டோம். இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

2

## ஆஸியில் மாணவர்களை மீட்கப் புறப்பட்டது விமானம்

கொழும்பு, மே 8
கொரோனோ வைரஸ் தாக்கம் காரணமாக, ஆஸ்திரேலியாவில் சிக்கியுள்ள இலங்கை மாணவர்களை அழைத்து வருவதற்காக, சிறிலங்கன் எயார்லைன்ஸுக்குச் சொந்தமான விசேட விமான

2

## ஒரு மாதச் சம்பளத்தை கோருவதில் நியாயமில்லை

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 8
கொரோனாவால் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் மாணவர்கள் பலருக்கு ஆசிரியர்கள் உதவியிருக்கின்றார்கள். இந்த நிலையில் ஒரு மாதச் சம்பளத்தை வழங்குமாறு ஜனாதிபதியின் செயலர் கேட்பதில் எந்த நியாயமும் இல்லை. இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

2

## செயற்கைச் சுவாசகருவிகள்: வழங்குகின்றது அமெரிக்கா

கொழும்பு, மே 8
அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ரொபர்ட் சார்ள்ஸ் ஓ பிரையன் இலங்கைக்கான அமெரிக்காவின் ஆதரவு குறித்து தெளிவுபடுத்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்‌ஷவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளார். இதன்போது இலங்கைக்குத் தேவையான செயற்கைச் சுவாசக்கருவிகளை

2

## வடக்கு சலூன்களுக்கு 18 நிபந்தனைகள்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் அறிவிப்பு



யாழ்ப்பாணம், மே 8
சிகை அலங்கரிப்பு நிலையங்களை நடாத்தும் போது, பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்கள், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்டுள்ளது.
இதன் பிரகாரம் சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்கள் விதிக்கப்பட்டுள்ள 18 நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யவேண்டும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஒவ்வொரு சிகை அலங்கரிப்பு நிலையத்

2

## 90,000 சுகாதாரப் பணியாளர்களுக்கு கொரோனா வைரஸ் பரவல்?

### சர்வதேச தாதியர்கள் பேரவை அறிக்கை

கொழும்பு,மே 8
உலகளாவிய ரீதியில் 90 ஆயிரத்துக்கும் அதிக மான சுகாதார பணியாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று பரவியிருக்கலாம் என்று சர்வதேச தாதியர்கள் பேரவை தெரிவித்துள்ளது. சர்வதேச தாதியர்கள் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது. கொரோனா வைரஸுக்கான பாதுகாப்புக் கருவிகளுக்குத் தொடர்ந்தும் பற்றாக்குறை காணப்படுவதால், இரண்டு லட்சம் சுகாதார பணியாளர்களுக்குக் கொரோனா வைரஸ் பரவுவதற்கான சாத்தியம் காணப்படுகிறது என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)

## 4 பேர்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
அரியாலையில் இடம்பெற்ற ஆராதனையில் பங்கேற்ற சுவிஸ் மதபோதகருடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய 21 பேரில் 17 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் கொழும்பு தொற்றுநோய் மருத்துவமனை, இரணவில மருத்துவமனை, கந்தக்காடு மருத்துவமனை என்பவற்றுக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களில் நேற்று வரையில் 10 பேர் குணமடைந்துள்ளனர். இரணவிலவில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 4 பேர் குணமடைந்துள்ளனர். இவர்கள் இன்று மாலை வீடுகளுக்கு அழைத்து வரப்பட்டனர். (ஒ,5,20)

## கூட்டமைப்பைத் திருப்திப்படுத்தினால்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் பிரதமரிடம் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் அரசு செய்து கொடுக்கவேண்டும். இது விடயத்தில் நாம் உறுதியாகவே இருக்கின்றோம். ஆனால், தமிழ்க் கைதிகளின் விடுதலை, அதிகாரப் பகிர்வு ஆகியன தொடர்பில் கூட்டமைப்பால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பில் விழிப்பாகவே இருக்க வேண்டும்.
கைதிகள் விடுதலை உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக இதற்கு முன்னரும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன. கூட்டமைப்பின் அரசியல் நிகழ்ச்சி நிரல் என்பது வேறுபட்டது. ஆகவே, விழிப்பாக இருக்கவேண்டும்.
இது விடயத்தில் ராஜபக்ஷ அரசு எவ்வாறு செயற்படும் என்பதை அவதானித்துக் கொண்டிருக்கின்றோம்.
கூட்டமைப்புக்குத் தேவையானவற்றைச் செய்வதற்கு முற்பட்டால் சிங்கள, பௌத்த மக்களின் ஆதரவை அரசு இழக்கநேரிடும்.
பெரும்பான்மையான மக்கள் வழங்கிய ஆணையைக் காட்டிக்கொடுத்துவிட்டு, கூட்டமைப்பின் ஒத்துழைப்பை பெறுவதற்கு அரசு முயற்சிக்குமானால் அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். கடும் எதிர்ப்பை வெளியிடுவோம்.
நெருக்கடியான சூழ்நிலையைப் பயன்படுத்தி தனது நோக்கத்தை அடைந்து கொள்வதற்கே கூட்டமைப்பு முயற்சிக்கிறது. இதற்கும் நாம் இடமளிக்கமாட்டோம். ஆகவே, அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடவேண்டாம் என்று பிரதமரிடம் கேட்டுக்கொள்கின்றோம்.
அதேவேளை, போர் முடிவடைந்த பின்னர் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தாது, வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கியிருக்கவேண்டும். அதனை மஹிந்த அரசு செய்யவில்லை. சிறிமாவோ பண்டாரநாயக்க அன்று மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தார். அவ்வாறு செயற்பட்டிருக்கவேண்டும் - என்றார். (ஒ,5,44)

## இளைஞன்...

னைகளை செய்ய சுகாதாரத் தரப்பு தீர்மானித்தது. அவரிடமிருந்து மாதிரிகள் பெறப்பட்டு பிசிஆர் பரிசோதனைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளன. (ஒ,5)

## ஆஸியில் மாணவர்களை...

மொன்று, இன்று அதிகாலை ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகர் நோக்கிப் புறப்பட்டுள்ளது.
கல்வி நடவடிக்கைகளுக்காக சென்ற நிலையில், அங்கு சிக்கியுள்ள இலங்கை மாணவர்கள் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர். (ஒ,5,22)

## ஒரு மாதச்....

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள் எமக்கொன்றும் புதிதல்ல. லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்து வாழ்விழந்து நிர்க்கதியாகியுள்ள நிலையில் அதிபரோடும், ஆசிரியர்களோடும் இணைந்திருந்த பல்லாயிரம் குடும்பங்களை பராமரித்து உதவிசெய்த பக்குவம் எமக்கு நிறையவே உள்ளது.
தற்போதைய சூழ்நிலைகளுக்காக ஜனாதிபதியின் செயலர் எமது ஒரு மாதச் சம்பளத்தைக் கோருவது நியாயமானது அல்ல.
அபாயகரமான சூழ்நிலைகளை அறிந்ததும் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் வீடுகளில் முடங்கினர். ஏதோ வழிகளில் தமது பாடசாலை சார்ந்த பிள்ளைகளின் குடும்பங்களுக்கும் ஏனைய வறிய நிலையில் உள்ள குடும்பங்களுக்கும் தமது வேதனத்தில் பெரும்பகுதியைச் செலவுசெய்து பேருதவி புரிந்துள்ளனர். இப்போதும் அதனைச் செய்தவண்ணம் உள்ளனர். அதுமட்டுமன்றி தம்மோடு தொடர்புடைய கொடையாளர்களுக்கூடாக பல உதவிகளை நெறிப்படுத்தி வருகின்றனர்.
இவற்றை அறிந்திராத ஜனாதிபதியின் செயலர் எம்மிடம் ஒருமாத வேதனத்தைக் கோருவது நியாயமில்லை, என்பதற்கு அப்பால் அரசுக்கு வேறு வழிகளில் கிடைக்கும் உதவிகளையும், இறக்குமதிகளால் கிடைக்கும் வருமானத்தையும் கணக்கீடு செய்ய வேண்டும்.
ஆசிரியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படுவதில்லை. இதைவிட விடுபட்ட கல்விக் காலங்களைப் பூரணப்படுத்துவதற்கு மேலதிக கொடுப்பனவுகள் எவையும் வழங்கப்படுவதும் இல்லை. ஏனைய அரச ஊழியர்களுக்கு அவ்வாறல்ல. அவர்கள் மேலதிகமாக செய்கின்ற ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. உண்மையில் தற்போது ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற வேதனம் அவர்களின் வாழ்க்கைக்கே போதுமானதாக இல்லை. இடர்க்காலங்களில் அதிக விலை கொடுத்தே பொருள்களைக் கொள்வனவு செய்தமை எல்லோரும் அறிந்த விடயம். பெரும்பாலான ஆசிரியர்கள் வங்கிக் கடன் செலுத்துவதற்கே பெரிதும் அவஸ்தைப்படுகின்றனர்.
இவ்வாறான நிலையில் மே மாதச் சம்பளத்தை முழுமையாக வழங்குமாறு ஜனாதிபதியின் செயலர் கோருவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது, என்றுள்ளது. (ஒ,5,20)

## இலங்கைக்கு....

அரசிடமிருந்து சர்வதேச நாணய நிதியம் கோரிக்கை பெற்றதை உறுதிப்படுத்தினார்.
இக் கோரிக்கையுடன் தொடர்புடைய அனைத்து காரணிகளையும் மதிப்பிடுவதற்கு சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பில் செயற்பட்டு வருவதாகவும், அதே நேரத்தில் இலங்கை அதிகாரிகள் நிதியத்துடன் எதிர்கால ஈடுபாட்டிற்கான பலவிதமான விருப்பங்களில் ஆர்வத்தை வெளிப்படுத்தியதாகவும் அவர் கூறினார். (ஒ,5)

## கூட்டமைப்பு இணங்காது...

தொடர்பில் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையை ஐக்கியப்படுத்த வேண்டுமெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் ஏதேனும் ஒரு விதத்தில் இணக்கப்பாட்டுக்கு கொண்டுவரவேண்டும். ஆனால், கூட்டமைப்பின் நிலைப்பாடுகளால் இணக்கப்பாட்டுக்கு வருவதில் நெருக்கடி நிலை இருக்கின்றது.
எனவே, கூட்டமைப்பைக் காட்டிலும் நடுநிலையாக செயற்படக்கூடிய பலமானதொரு சக்தி தமிழ் மக்கள் மத்தியில் எதிர்காலத்தில் உருவானால் நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கான சூழ்நிலை உருவாகும். குறிப்பாக தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்காமல் இலங்கையை ஐக்கியப்படுத்த முடியாது என்பதை சிங்கள மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.
அதேபோல் சிங்கள மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் ஒருபோதும் உரிமைகளை பெற்றெடுக்க முடியாது என்பதை தமிழ் மக்களும் புரிந்துகொள்ளவேண்டும்.
அதேவேளை, ஒற்றையாட்சிக்குள் அதிஉச்ச அதிகாரம் பகிரப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன் என்றும் அவர் கூறினார். (ஒ,5,44)

## வடக்கு சலூன்களுக்கு...

தையும் நடாத்துவதற்கான அனுமதிச் சான்றிதழ் அந்தப் பிரதேசத்திற்குரிய சுகாதார மருத்துவ அதிகாரியால் வழங்கப்படும். விண்ணப்பத்தை சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர் தமது பிரதேசத்திற்குரிய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் பெற்று, அதனைப் பூரணப்படுத்திச் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் அந்தப் பிரதேசத்துக்குரிய பொதுச்சுகாதார பரிசோதகர் சிகை அலங்கரிப்பு நிலையத்தைப் பார்வையிட்டு இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பின் சிகை அலங்கரிப்பு நிலையத்தை நடத்துவதற்குரிய அனுமதிச் சான்றிதழை வழங்க பரிந்துரைப்பார். பரிந்துரையின் அடிப்படையில் சுகாதார மருத்துவ அதிகாரியால் அனுமதிச் சான்றிதழ் வழங்கப்படும். அதன் பின்னரே சிகை அலங்கரிப்பு நிலையத்தை நடாத்த முடியும். இந்தச் சான்றிதழ் சிகை அலங்கரிப்பு நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். சிகை அலங்கரிப்பு நிலையத்தில் முடி திருத்துவதற்கும், முடிக்கான சாயம் பூசுவதற்கும் மட்டுமே அனுமதி வழங்கப்படுகின்றது. முகச்சவரம் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.
காய்ச்சல், இருமல், தடிமன், தொண்டை நோ, சுவாசிப்பதில் சிரமம், போன்ற நோய் அறிகுறி உடையவர்கள், கடந்த 14 நாள்களுக்குள் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட அல்லது சந்தேகப்படும் ஒருவருடன் தொடர்பில் இருந்த ஒருவர் அல்லது சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்ட ஒருவர் எக்காரணம் கொண்டும் அங்கு பணியாற்ற அனுமதிக்கக் கூடாது. பணியாற்றுபவர்களின் பெயர், நிரந்தர முகவரி, பணியாற்றும் காலம் போன்ற விபரங்கள் அடங்கிய பட்டியல் சிகை அலங்கரிப்பு நிலையத்தில் பேணப்பட வேண்டும்
ஒவ்வொரு பணியாளர்களும், வாடிக்கையாளர்களும் சவர்காரமிட்டு கை கழுவுவதற்கான ஏற்பாடு நிலையத்தின் வெளிப்புறத்திலும் உள்ளகத்திலும் செய்யப்படல் வேண்டும். பணியாளர்கள் கட்டாயமாக முகக் கவசம் மற்றும் முகத்தடுப்பு அல்லது பாதுகாப்புக் கண்ணாடி அணிந்திருக்க வேண்டும்.
காலினால் செயற்படுத்தப்படும் கழிவகற்றல் கூடை ஒவ்வொரு முடிதிருத்தும் கதிரைக்கு அருகிலும் இருக்க வேண்டும்.
வாடிக்கையாளர்களிடையே ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளி இருக்கத்தக்க முறையில் கதிரைகள் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் குறித்த நேரம் ஒதுக்கப்பட்டு அவர்களுக்குரிய நேரத்துக்கு மட்டுமே அவர்களை சேவையை வழங்குவதற்கு வரவழைத்தல் வேண்டும்.
சிகை அலங்கரிப்பு நிலையத்தில் இடவசதிகளுக்கேற்ப காத்திருக்கும் வாடிக்கையாளர்களின் அளவை மட்டுப்படுத்த வேண்டும்.
பத்திரிகைகள், சஞ்சிகைகள், எவையும் வாடிக்கையாளரின் பாவனைக்காக வழங்கப்படக்கூடாது.
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் சேவையை வழங்கிய பின்னர் சவர்க்காரமிட்டு கை கழுவிய பின்பே மற்றொருவருக்கு சேவை வழங்குதல் வேண்டும்.
முடி திருத்தும் போது வாடிக்கையாளரின் பின்புறமாக வும் பக்கப் புறமாகவும் இருந்து மட்டும் செயற்பட வேண்டும். ஒருபோதும் முகத்துடன் முகம் நோக்கக்கூடியவாறு சேவையை வழங்க முற்படக்கூடாது.
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பயன்படுத்தும் உபகரணங்களை மதுசார தொற்றுநீக்கி மூலம்; அல்லது கொதிக்கும் நீரில் 20 நிமிடங்கள் அவித்து முறைப்படி தொற்று நீக்கம் செய்ய வேண்டும்.
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் வழங்கப்பட்ட சேவை நிறைவடைந்த பின்னர் கதிரையும், உபகரணங்களும் தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும்.
நிலையத்தில் சேரும் கழிவுகள் யாவும் பைகளில் சேகரிக்கப்பட்டு உரிய முறையில் கழிவு முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் தனித்தியான துணிகள், துவாய்கள் பாவிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பாவித்த துணி தோய்க்கப்பட்டு உலர்ந்த பின்னரே இன்னொரு வாடிக்கையாளருக்கு பாவிக்க முடியும். அதேவேளை வாடிக்கையாளரை தமது வீட்டிலிருந்தே துணியை எடுத்துவருவதற்கு ஊக்குவிப்பது நலம் தரும். குளிரூட்டிகள் மற்றும் வளிச் சீராக்கிகள் சிகை அலங்கரிப்பு நிலையத்தின் உள்ளகங்களில் பாவிப்பது தடைசெய்யப்பட வேண்டும். கதவுகள், யன்னல்கள் திறந்த நிலையில் வைக்கப்பட்டு காற்றோட்டம் பேணப்பட வேண்டும். திரைச்சீலைகள் இடுவதை இயன்றளவு தவிர்த்தல் வேண்டும்- என்றுள்ளது. (ஒ,5)



# இலங்கைக்கு சீனாவிடமிருந்து உதவிகள்

கொழும்பு, மே 8

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கைக்கு 30 ஆயிரம் பரிசோதனை உபகரணங்கள், ஒருமுறை பயன்படுத்தி அகற்றும் 15 ஆயிரம் தற்காப்பு அங்கிகள் என்பவற்றைச் சீனா வழங்கியுள்ளது.

சீனா இலங்கைக்கு ஏற்கனவே இரு கட்டங்களாக உதவி வழங்கியிருந்த நிலையில் மூன்றாம் கட்டமாக இந்த உதவிகளை வழங்கியுள்ளது. இந்த உதவிப் பொருள்கள் நேற்று ஷங்காய் விமான நிலையத்தில் இருந்து எம்.யு 231 என்ற சீன எயார் லைன்ஸ் விமானம் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிரான இலங்கையின் போராட்டத்துக்கு உதவும் வகையில் மூன்றாம் கட்ட நன்கொடையாக 30 ஆயிரம் பரிசோதனை உபகரணங்கள், 30 ஆயிரம் தற்பாதுகாப்பு அங்கிகள், 30 ஆயிரம் கே.என் 95 முகக்கவசங்கள், 30 ஆயிரம் பாதுகாப்புக் கண்ணாடிகள், 6 லட்சம் சத்திர சிகிச்சை முகக் கவசங்கள் என்பவை வழங்கப்படும் என்று கடந்த மாதம் 29 ஆம் திகதி சீனத் தூதரகம் அறிவித்திருந்தது.(எ)

# தேர்தல் முறை மாறினாலே பலமான அரசு உருவாகும்

## லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, மே 8

ஜூன் மாதம் பொதுத்தேர்தல் இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம். பலமான அரசாங்கம் தோற்றம் பெற வேண்டுமாயின் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்வது அவசியமாகும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் தாக்குதல் தற்போது ஓப்பீட்டளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. பொதுத்தேர்தலை அடுத்து நடத்துவதே அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும். ஜூன் மாதம் நடுப்பகுதியில் பொதுத்தேர்தல் இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம். பலமான அரசாங்கம் தோற்றம் பெற வேண்டுமாயின் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்ய வேண்டும். ஆனால் தற்போது தேர்தல் முறைமையில் திருத்தம் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.

பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான மக்களாதரவு அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெறும். பொதுத்தேர்தலை பாதுகாப்பான முறையில் நடத்துவதே அரசாங்கத்தின் அடுத்த இலக்கு - என்றார். (ப)

# மாவட்டங்களுக்கிடையில் போக்குவரத்துக் கட்டுப்பாடு

## விரைவில் வர்த்தமானி அறிவிப்பு

கொழும்பு, மே 8

நாட்டில் மாவட்டங்களுக்கிடையில் மக்கள் போக்குவரத்துத் தொடர்பான கட்டுப்பாடுகள் அடுத்த சில நாள்களுக்குள் அதிசிறப்பு வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.

இந்தக் கட்டுப்பாடுகள் தொடர்பில் இன்று அல்லது நாளை சனிக்கிழமையன்று விளக்கமளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நோய்த்தொற்று இல்லாத வலயத்திலிருந்து நோய்த்தொற்று இல்லாத பகுதிக்கு வருவது சிக்கலானது அல்ல என்றும், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மோதல் சம்பவங்களில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு,மே 8

கரந்தெனிய மற்றும் குளியாப்பிட்டிய பிரதேசங்களில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் இருவர் உயிரிழந்தனர். மேலும் இரு பெண்கள் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

குளியாப்பிட்டி பகுதியில் காதல் விவகாரம் தொடர்பில் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக அசிட் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் பெண்கள் இருவரும் இளைஞர் ஒருவரும் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதில் சிகிச்சை பயனின்றி இளைஞர் உயிரிழந்தார்.சம்பவத்தில் குருணாகல் - மல்கடுவாவ பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே உயிரிழந்தார். சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கரந்தெனிய - திவ்யகஹவெல பகுதியில் இரு தரப்பினருக்கிடையில் இடம்பெற்ற மோதலில் கத்திக் குத்துக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளதுடன் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# மோதரையில் உயிரிழந்தவருக்கு கொரோனா தொற்று இல்லையா?

## மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதக நிபுணர்கள் தொழிற்சங்கத்தின் கருத்தால் சர்ச்சை

கொழும்பு, மே 8

கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறியும் பி.சி.ஆர். மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் தவறாக வழங்கப்பட்டுள்ளமை தொடர்பான தகவல்கள் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்று மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதக நிபுணர்கள் தொழிற்சங்கத் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

இதுவரை 13 தவறான அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. ஸ்ரீ ஜயவர்த்தனபுர ஆய்வு கூடத்தில் இருந்து இவ்வாறான 8 அறிக்கைகளும், கொழும்பு பல்கலைக் கழக ஆய்வுகூடத்திலிருந்து கடந்த 5 ஆம் திகதி வழங்கப்பட்ட 4 பரிசோதனை அறிக்கைகளும், கொத்தலாவ பாதுகாப்புக் கல்லூரி ஆய்வுகூடத்திலிருந்து வழங்கப்பட்ட ஒரு மருத்துவ அறிக்கையும் தவறானவை என்று கண்டறியப்பட்டுள்ளன.

கடந்த 5 ஆம் திகதி கொழும்பு தேசிய மருத்துவமனையில் 4 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என்று கூறப்பட்டது. தேசிய மருத்துவமனையின் கட்டணம் செலுத்தும் சிகிச்சை அறையின் தாதி, கொலன்னாவை - சாலமுல்ல மற்றும் ராஜகிரிய பண்டாரநாயக்கபுர, மோதரை பகுதியைச் சேர்ந்த 52 வயதான முஸ்லிம் பெண் ஒருவர் ஆகிய நால்வருக்கு கொரோனா தொற்று உள்ளது என்று மருத்துவ அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கைகள் குறித்து நாம், சுகாதார அமைச்சின் கீழ் உள்ள பரிசோதனை மையங்களில் ஆய்வு செய்தபோது, கொரோனா உள்ளதாக கூறி கொடுக்கப்பட்டுள்ள அறிக்கைகளில் தவறுகள் உள்ளமை கண்டறியப்பட்டது. சுகாதார அமைச்சின் கீழ் உள்ள ஆய்வு கூடங்களில் முன்னெடுக்கப்பட்ட மேலதிக பரிசோதனைகளின் போது திருத்தப்பட்டன.

13 தவறான மருத்துவ அறிக்கைகள் மக்களின் கைகளுக்கு சென்றுள்ளன. அதனால் மக்களுக்கு மருத்துவ ஆய்வு அறிக்கைகள், மருத்துவ பரிசோதனையாளர்கள் தொடர்பிலான நம்பிக்கையில் கேள்வி எழுந்துள்ளது.

இவ்வாறான தொற்றுப் பரவல் சூழலில், ஆய்வுகள் தொடர்பாகச் சரியான நடவடிக்கைகள் தேவை. அந்தப் பொறுப்பை சரிவரச் செய்யாத இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்தும் பொறுப்பில் உள்ள நிபுணர்கள், பணிப்பாளர்கள் கடமையை சரிவரச் செய்யாமை தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் ஜனாதிபதியைக் கோருகிறோம்- என்றார். (எ)

# பாடசாலைகளில் கிருமிநீக்க அரசு நிதி வழங்கவேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு,மே 8

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரைகளின் படி பாடசாலைகளில் கிருமி ஒழிப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் நிதி வழங்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பாடசாலைகளை ஆரம்பித்தால் தொடர்ந்தும் தினமும் சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உள்ளதால் தேவையான நிதியை வழங்குவதற்கு அரசாங்கம் இப்போதே தேவையான ஒதுக்கீடுகளை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும். பெற்றோர்கள் இது தொடர்பாக பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவர். 50 மாணவர்களுக்கு ஒரு நீர் குழாய் எனும் அடிப்படையில் வசதி செய்யப்பட வேண்டும்.

கைகளைக் கழுவிக் கொண்டு பாடசாலைக்குள் நுழையும் வகையில் வாயிலில் நீர் குழாய் பொருத்த வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வழிகாட்டல்களை வழங்கியுள்ளார். என்றார்.(க)

# சஹ்ரானின் சகோதரனுக்கு மருத்துவ உதவி வழங்கியவர் கைது

மட்டக்களப்பு,மே 8

கடந்த ஆண்டு ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியான சஹ்ரானின் சகோதரனுக்கு, மருத்துவ உதவி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, காத்தான்குடிப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் விசாரணைக்காக கொழும்பு 4 ஆம் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில், கடந்த 201 8ஆம் ஆண்டு வெடி விபத்தொன்றில் சஹ்ரானின் சகோதரனான மொஹமட் றில்வான் காயமடைந்து வைத்தியசாலைக்குச் செல்லாமல் மறைந்து, ஒல்லிக்குளம் முகாமில் இருந்து மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளார்.

அவருக்கு மருத்துவ உதவிகள் செய்த குற்றச்சாட்டில் அரசாங்க ஸ்தாபனம் ஒன்றில் கடமையாற்றி வரும் காத்தான்குடியைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (க)

சுகாதார ஆலோசனைக்கு அமைய

# தனியார் துறைகளை திறப்பதற்கு இணக்கம்

கொழும்பு, மே 8

இலங்கையில் உள்ள சகல தனியார் நிறுவனங்களையும் சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய திறக்க, கொவிட் 19 வைரஸிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சர் தினேஸ் குணவர்தனவால் நியமிக்கப்பட்ட விசேட செயலணி இணக்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் செயலணியில் அங்கம் வகிக்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள், இலங்கை முதலாளிகள் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நேற்று அமைச்சர் தினேஸ் குணவர்தனவைச் சந்தித்து கலந்துரையாடியபோதே இந்த இணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

அனைத்து ஊழியர்களின் வேலைவாய்ப்பு பாதுகாப்பையும் உறுதி செய்வது அரசாங்கத்தின் கொள்கையாகும் என அமைச்சர் இதன்போது கூறினார். குறிப்பாக சமூக இடைவெளியைப் பேணும் அதேவேளையில் சேவை மாற்றத்தை தேவைக்கேற்ப பயன்படுத்தவும் இதன்போது முடிவு செய்யப்பட்டது.

சேவைக் காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவுகளுடன் (வீட்டில் இருக்கும் காலத்தில்) சம்பளத்தை யும் வழங்கவும் செலுத்தவும், அடிப்படை சம்பளத்தில் 50 வீதம் அல்லது 14,500 ரூபாவை விட அதிகரித்த தொகையை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. அதேபோல் ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் ஊழியர் சேமலாப நிதி ஆகியவற்றை முறையாகச் செலுத்தவும் இங்கு இணக்கம் காணப்பட்டது.

இந்த ஒப்பந்தங்கள் மே மற்றும் ஜூன் மாதங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஜூன் மாத இறுதிக்குள் இந்தக் குழு மீண்டும் கூடி அப்போதைய நிலைமையை மதிப்பாய்வு செய்யும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் அமைச்சின் செயலாளர் டி.எம். சரத் அபயகுணவர்தன மற்றும் தொழிலாளர் ஆணையாளர் நாயகம் ஏ.வி. விமலவீர ஆகியோர் கலந்து கொண்டனர். (ப)

# மருந்து விசிறும் இயந்திரம் வர்த்தக சங்கத்தால் வழங்கல்

வவுனியா, மே 8

வவுனியா வர்த்தக சங்கத்தால் மருந்து விசிறும் இயந்திரம் மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டது. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் வவுனியா நகரின் முக்கிய பகுதிகள் சிறப்பு அதிரடிப்படை மற்றும் பொலிஸாரால் தொற்று நீக்கப்பட்டு வருகின்றது. தொற்று நீக்கும் செயற்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக வவுனியா வர்த்தக சங்கத்தால் மருந்து விசிறும் இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன, வர்த்தக சங்கத்தின் தலைவர் சுஜன் மற்றும் செயலர் அம்பிகைபாகன், சிறப்பு அதிரடிப்படையினர், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை ஊரடங்கு தளர்த்தப்படுவதைக் கருத்தில் கொண்டு புதிய பேருந்து நிலையப் பகுதியில் தொற்று நீக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. (ஓ.5,110)

# 11 நிறுவனங்களை திறப்பதற்கு அனுமதி

கொழும்பு,மே 8

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிய தொழில் திணைக்களத்துக்குட்பட்ட 11 நிறுவனங்களை எதிர்வரும் 11 ஆம் திகதி திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தொழில் ஆணையாளர் நாயகம் ஏ.விமலவீர இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். அத்தியாவசிய சேவையாளர்களை மாத்திரம் ஈடுபடுத்தி, இந்த நிறுவனங்களின் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (க)

# தொடர் கொள்ளையில் ஈடுபட்ட ஐவர் கோப்பாயில் கைது

யாழ்ப்பாணம், மே 8

கோப்பாயில் ஊரடங்கு வேளையில் தொடர்ச்சியாக மூன்று வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஐவர் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்று கைதுசெய்யப்பட்டனர். கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கரந்தன் வீதிப் பகுதியில் மே மாதம் முதலாம் திகதி ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்த வேளையில் தொடர்ச்சியாக மூன்று வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து வீட்டில் உள்ளவர்களை தாக்கி காயப்படுத்தி வீட்டில் இருந்த பணம், நகை, சைக்கிள் மற்றும் ஏனைய பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் இரண்டு பெண்கள் உள்ளடங்கலாக ஐவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கொள்ளையில் ஈடுபடுவதற்கு பயன்படுத்திய சைக்கிள், வாள், திருட்டுப்போன கோடாரி, சைக்கிள், திருடிய நகைகளை அடகு வைத்ததற்கான அடகு சிட்டைகள் மற்றும் விற்பனை செய்ததற்கான சிட்டைகள் என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20 தொடக்கம் 35 வயதுடையவர்கள் என தெரிவித்த யாழ் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரான்சிஸ், கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவித்தார். (ம)

# லக்ஸ்மன் பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, மே 8

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. தனது மகனை வைத்து சமூக வலைத்தளங்கள் ஊடாக தம்மை இழிவுபடுத்த சிலர் முயற்சிப்பதாக தெரிவித்தே அவர் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். (ப)

# அரச, தனியார் சேவைகள் திங்கள் முதல் ஆரம்பம்

கொழும்பு, மே 8

நாட்டை இயல்புக்குக் கொண்டு வரும் செயற்பாட்டின் கீழ் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் அரச மற்றும் தனியார் பிரிவுகளின் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அரசாங்கம் மற்றும் சுகாதாரப் பிரிவால் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு முறைமைகளுக்கமைய சேவைகளை வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நடைமுறை குறித்து இன்னும் ஓரிரு தினங்களில் அறிவிக்கப்படவுள்ளதாக பிரதி காவற்துறைமா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். இதே வேளை, அரச மற்றும் தனியார் பிரிவு சேவையாளர்கள் கடமைகளுக்கு சமுகமளிப்பதற்காக பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தவுள்ளனர் என்று இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையின் போக்குவரத்து பிரிவு பிரதி பொது முகாமையாளர் ஏ.எச்.பண்டுக இதனை தெரிவித்துள்ளார். அந்தந்த நிறுவனங்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கமைய பிரதான வீதிகள் சிலவற்றில் பேருந்துக்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை, தொடருந்து போக்குவரத்து தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை எட்ட தொடருந்து திணைக்களம் தீர்மானித்துள்ளது. தொடருந்து போக்குவரத்து அதிகாரி வீ.எஸ். பொல்வத்தகே இதனைத் தெரிவித்துள்ளார். (ப)

## மருந்தகத்தில் ஒருவர் சாவு

கொழும்பு, மே 8

பிலியந்தலைப் பகுதியில் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றுக்கு வந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது.

பிலியந்தலை விஷ்வ வலயம் பகுதியில் வசிக்கும் 66 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மாரடைப்புக்காகப் பயன்படுத்தும் குளிசைகளைக் கொள்வனவு செய்வதற்கு மருந்தகத்துக்கு வருகை தந்துள்ளார். அவர் மாரடைப்பில் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## சதொச நிலையங்களும் திங்கள் முதல் திறக்கும்

கொழும்பு, மே 8

நுகர்வோரின் நன்மை கருதி எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நாடு முழுவதுமுள்ள சதொச விற்பனை நிலையங்களை மீளத் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருள்களை தட்டுப்பாடின்றி நுகர்வோருக்கு வழங்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று லங்கா சதொச நிறுவனத் தலைவர் நுசாத் பெரேரா தெரிவித்துள்ளார். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு தமது ஊழியர்களுக்கு அறிவித்துள்ளதாக அவர் கூறியுள்ளார். (ப)

## இலங்கையர் எழுவருக்கு ருமேனியாவில் கொரோனா

கொழும்பு,மே 8

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ருமேனியாவில் ஏழு இலங்கையர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டு ஊடக அறிக்கையின் படி, குறித்த ஏழு இலங்கையர்களும் வடக்கு ருமேனியாவின் போடோசானி நகரில் உள்ள ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அந்த ஆடைத் தொழிற்சாலையில் கொரோனா தொற்றுக்குள்ளான 7 இலங்கையர்கள்அடங்கலாக மொத்தமாக 44 இலங்கைப் பிரஜைகள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். எவ்வாறெனினும் இலங்கை ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகளை ருமேனியா தொழிலாளர் ஆய்வாளர்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ருமேனிய ஊழியர்கள் அனுபவிக்கும் அதே உரிமை, இலங்கைத் தொழிலாளர்களுக்கும் உண்டு என்பதால், இந்தச் சம்பவம் குறித்து கடுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ளனர். (க)

## வெலிசரவிலேயே அதிகமானோருக்கு கொரோனா தொற்று

கொழும்பு,மே 8

வெலிசர கடற்படை முகாமில் அதிகமானோருக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டதை அடுத்து, வேறு எந்தப் பகுதியிலும் அதிகமான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். (க)

## மஞ்சளின் தட்டுப்பாட்டை போக்க அரசு திட்டங்கள்

கொழும்பு, மே 8

மஞ்சளுக்கு நாட்டில் நிலவும் தட்டுப்பாட்டை நீக்க பல திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேவைக்காக, வருடத்துக்கு 7 ஆயிரத்து 900 மெட்ரிக் தொன் மஞ்சள் தேவைப்படுவதாகவும் ஆனால், கடந்த வருடம் வரை இதில் ஆயிரத்து 500 மெட்ரிக் தொன் மாத்திரமே இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் மிகுதி 5 ஆயிரத்து 400 மெட்ரிக் தொன் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், கடந்த வருட இறுதியில், மஞ்சள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டதையடுத்தே மஞ்சள் தூளுக்கு சந்தையில் தட்டுப்பாடு நிலவ ஆரம்பித்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தட்டுப்பாட்டை நீக்குவதற்குப் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டமாக, சுங்கப்பிரிவால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 600 மெட்ரிக் தொன் மஞ்சளை, சந்தைக்கு அனுப்பவுள்ளதாகவும் இவ்வருடம் சுமார். 2 ஆயிரத்து 200 ஹெக்டெயாரில் புதிதாக மஞ்சள் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ப)

## மேல் மாகாணத்திலிருந்து 3ஆம் கட்டமாக 1200 பேர் சொந்த ஊர் திரும்பினர்

கொழும்பு, மே 8

கொரோனா வைரஸ் குடும்பத்தின் கொவிட் 19 தொற்று பரவலைக் கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால், தமது இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாமல் மேல் மாகாணத்தில் சிக்கியுள்ளவர்களில் மேலும் ஆயிரத்து 200 பேர் இன்று சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே நுகேகொடை பொலிஸ் வலயத்தில் 600 பேர் வரை கடந்த 5 ஆம் திகதி அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், அதே பொலிஸ் வலயத்திலிருந்து இன்று 1200 பேர் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 23 மாவட்டங்களைச் சேர்ந்த நபர்கள் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களில் அனுப்பி வைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.


ஏற்கனவே முதல் கட்டமாக மேல் மாகாணத்தின் களனி பொலிஸ் பிரிவில் இவ்வாறு சொந்த இடங்களுக்கு செல்ல முடியாமல் இருந்த 370 பேர் கடந்த சனிக்கிழமை 2 ஆம் திகதி பொலிஸ் பாதுகாப்புடன் அனுப்பப்பட்டனர். மேல் மாகாண ஆளுநர், மார்ஷல் ஒப் தி எயார் போர்ஸ் ரொஷான் குணதிலகவின் திட்டத்தின் பிரகாரம், மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வழி நடத்தலில், இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ப)

## கொரோனா பரவிய காலம் கண்டுபிடிப்பு

கொழும்பு,மே 8

கடந்த வருடத்தின் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலேயே கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவிலுள்ள விஞ்ஞானிகள் சிலர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளனர். கொரோனா தொற்றுக்கு இலக்கான 7 ஆயிரத்து 500 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட மரபணுப் பரிசோதனையின் போதே இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (க)



# மண்டேலாவுக்கு கொழும்பில் சிலை

*அமைச்சரவையில் முடிவு*

கொழும்பு, மே 8

தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது உருவச்சிலையொன்றை நிர்மாணிப்பதற்கு காணியொன்றைப் பெற்றுக்கொடுப்பதாக அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை கூடிய அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது உருவச்சிலையொன்றை நிர்மாணிப்பதற்கு கொழும்பு மாநர சபை நூல்நிலைய வளாகத்துக்குட்பட்ட காணியில் இடவசதியைப் பெற்றுக் கொடுத்தல்.

இதே போன்று எதிர்வரும் தேசிய வீரர்கள் மற்றும் பாராட்டப்பட வேண்டியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பல்வேறு இடங்களில் உருவச்சிலைகள் நினைவுச்சின்னங்களை மறுசீரமைப்பு செய்வதற்குப் பதிலாக ஒரு விசேட இடத்தில் இவற்றை நிர்மாணித்து அஞ்சலி செலுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை வகுப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ப)

# அரச தரப்பினர் முதலில் ஊதியத்தை வழங்கட்டும்

## ஐ.தே.க. முன்னாள் எம்.பி. சுஜித் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, மே 8

அரச ஊழியர்களின் ஊதியத்தின் அரைவாசியை அர்ப்பணிக்குமாறு வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பினர், அவர்களின் ஊதியம் மற்றும் விசேட கொடுப்பனவுகளை அர்ப்பணிப்புச் செய்யாதிருப்பது ஏன்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேரா.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் சம்பளம் மற்றும் விசேட கொடுப்பனவு, ஏனைய செலவுகளுக்காகப் பெற்றுக் கொள்ளும் நிதியை கொரோனா வைரஸ் பாதிப்பால் ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளுக்கு வழங்காது அரச ஊழியர்களின் சம்பளத்தை எதிர்பார்ப்பது நியாயமற்ற செயற்பாடாகும்.

கொரொனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முயற்சிக்கும் அரச தரப்பினர், சுகாதாரப் பிரிவினர் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் அனைவருக்கும் எமது கௌரவத்தையும், நன்றியையும் தெரிவிக்கின்றோம். அரசு தேர்தலை நடத்துவதற்கு முயற்சிக்காது வைரஸ் பரவலைத் தடுக்க முயற்சித்திருந்தால் நாட்டுக்குள் வைரஸ் பரவாது தடுத்து நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும்.

வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 800 ஐக் கடந்துள்ளது. அரசு அது தொடர்பில் கவனம் செலுத்தாது, தேர்தலை நடத்துவதிலேயே அக்கறைகாட்டி வருகின்றது. தேர்தலை நடத்தும்போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகளில் வைரஸ் பரவுவதற்கான வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகின்றது. இது பெரும் அனர்த்தத்துக்கு வழிவகுக்கும்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பால் எந்தப் பிரயோசனமும் ஏற்படாது என்பதாலேயே அதைப் புறக்கணித்தோம். நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டுமானால் அது உத்தியோகபூர்வமானதான இருக்க வேண்டும். அதனால்தான் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை நடத்துமாறு கோரினோம் - என்றார். (எ)

# செயற்கைக்கோள்....

அமெரிக்கா வழங்கும் என அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உறுதியளித்துள்ளார். அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் இதனைத் தெரிவித்துள்ளது. அமெரிக்கா இலங்கைக்கிடையிலான நட்புறவும் ஒத்துழைப்புமானது நீண்ட வரலாற்றைக் கொண்டமைந்தது என்றும் ஓ பிரையன், ஜனாதிபதி கோத்தாபயவிடம் தெரிவித்துள்ளார். இந்த உரையாடலில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான முயற்சிகள், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து உரையாடியதாகவும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் தெரிவித்துள்ளது. அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான இருதரப்பு உறவு ஒரு சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ - பசுபிக் பிராந்தியத்தின் முக்கிய பகுதியாகும் என்றும் ஓ பிரையன் இந்த உரையாடலின்போது சுட்டிக்காட்டினார். மேலும் இலங்கை மக்களுக்கு செயற்கை சுவாசக்கருவிகளை வழங்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதி முன்வைந்துள்ளதாக ஓ பிரையன் இந்த தொலைபேசி உரையாடலின் போது தெரிவித்துள்ளார். (ஓ,5)

# கசிப்பு உற்பத்தி; ஒருவர் கைது

கிளிநொச்சி, மே 8

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அல்லிப்பளை பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்ததுடன், உற்பத்தி உபகரணங்களையும் பொலிஸார் மீட்டனர். மேலதிக விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கபட்டுள்ளதாக பளை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-6)

# கொரோனா நிவாரணத்துக்கு பாடுபட்ட அதிகாரிகளுக்கு விசேட கொடுப்பனவு

கொழும்பு, மே 8

அரசால் வழங்கப்பட்ட கொரோனா நிவாரணங்களை மக்களுக்கு வழங்குவதற்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்த கிராம குழுக்களின் அங்கத்தவர்களான அரச அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள், தொலைபேசி மற்றும் ஏனைய அத்தியாவசிய செலவுகளுக்காக விசேட கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன் கிழமை கூடிய அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு சுமார் 74 லட்சம் பேருக்கு தற்பொழுது வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சிரமமான காலப்பகுதிக்குள் இந்த நிவாரணத்தை வழங்கும் நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்களிப்புச் செய்த கிராம குழுக்களின் அங்கத்தவர்களான அரச அதிகாரிகளுக்கே இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஆதர்சி கிளார்க் மத்திய நிலையத்தின் கீழ் இதுவரையில் இலங்கை விஞ்ஞானிகளினால் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட நிலவு மீதான புகைப்படங்களை மேற்கொள்ளும் உபகரணங்கள் மூலம் நாளாந்தம் புகைப்படங்கள் மற்றும் தரவுகள் கிடைத்து வருகின்றன. இந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மிகவும் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பூமி கண்காணிப்பு செயற்கைக்கோள்கள் தரவுகளை பெற்றுக்கொள்தல் மற்றும் விநியோகிக்கும் மத்திய நிலையமொன்றை ஹோமாகம , தலகல பிரதேச ஸ்தாபித்தல். ருஹுனு பல்கலைக்கழகத்தில் 12 மாடிகளைக் கொண்ட வைத்திய பீட கட்டிடத் தொகுதிக்கான ஒப்பந்தக் காலம் நிறைவடைந்தமையால் அதன் நிர்மாணப்பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் மத்திய பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் அதன் நிர்மாணப்பணிகள் மீண்டும் ஆரபிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# புத்தளத்திலிருந்த மட்டக்களப்பு இளைஞர்கள் ஊர் திரும்பினர்

புத்தளம், மே 8

புத்தளம் மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக கொரோனா தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டிருந்த மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 46 இளைஞர்கள் இன்று வீடு திரும்பினர்.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் மேற்கொண்ட முயற்சியையடுத்து இவர்கள் இரண்டு பஸ் வண்டிகளில் மட்டக்களப்புக்கு அழைத்துச் செல்லப்படனர். புத்தளம் மாவட்டத்திலுள்ள தொழிற்சாலையொன்றில் வேலை செய்த இவர்கள் நாட்டில் ஏற்பட்ட கொரோனா அச்சத்தினையடுத்து வீடுதிரும்ப முடியாமல் சிக்கித் தவித்தனர். இந்த விடயம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து இளைஞர்கள் சொந்த வீடுகளுக்குத் திரும்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

இவர்கள் சந்திவெளி மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் சந்திவெளி பொலிஸ் காப்பரணில் இறக்கப்பட்டு விவரங்கள் பதிவுசெய்யப்பட்டதன் பின்னர் வீடுகளுக்கு அனுப்பப்பட்டதுடன் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ப)



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 08.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.